# DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII Code of Criminal Procedure)

...

**IN THE COURT OF THE ASSISTANT SESSIONS JUDGE, KANCHEEPURAM**

**Sessions Case No. ; SC.NO .57/2013**

**Calender Case No. ;**

**Primary Register Case No;**

**Deposition of Witness for ; Prosecution** அ.சா.9

**Defence**

**Court**

**Name : Soundararajan**

**Father's Name :**

**Age :**

**Religion :**

**Calling :**

**Address :**

**Phone /Mobile No. :**

**Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of 12th day of August 2022.**

முதல் விசாரணை—

நான் தற்போது காஞ்சிபுரம் மாவட்ட தனி பரிவு குற்ற புலனாய்வு துறையில் ஆய்வாளராக பணிபுரிந்த வருகிறனே். இதற்கு முன்பு 23.5.2012ம் தேதி நான் விஷ்ணு காஞ்சி காவல் நிலைய ஆய்வாளராக பணிபரிந்தபோது வாலாசாபாத் காவல் நிலைய பொறுப்பு ஆய்வாளராக பணிபுரிந்தேன். அன்றையதினம் வாலாசாபாத் காவல் நிலைய உதவி ஆய்வாளராக இருந்த ஜெயக்குமார் என்பவர் இவ்வழக்கை பதிவு செய்திருந்தார். அவர் தற்போது உயிருடன் இல்லை.

செங்கல்பட்டு அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையிலிருந்து வந்த தகவலின்பேரில் 23.5.2012ந்தேதி 15.00 மணிக்கு செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் அவசர சிகிச்சசை பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்த கணேசன் என்னபவரின் தாயார் வள்ளி என்பவரிடம் வாக்குமூலம் பெற்று அன்றைய தினம் மாலை 17.00 மணிக்கு வாலாசாபாத் காவல் நிலையம் வந்து வாலசாபாத் காவல் நிலைய குற்ற எண். 335/2012 பிரிவ 341, 324, 307 இதச வில் வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். முதல் தகவல் அறிக்கையில் உள்ள ஜெயக்குமார் என்பவரின் கையெழுத்து எனக்கு தெரியும் இது அவருடையது தான். முதல் தகவல் அிறக்ககை அ.சா.ஆ.10, அவரால் பதிவு செய்யபட்டட முதல் தகவல் அறிகசை பெற்ற நான் 18.15 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் சிவக்குமாா, ராஜமாணிக்கம் முன்னிலையில் பார்வை மகசர், மாதிரி வரைபடம் தயார் செய்தேன். பார்வை மகசர் அ.சா.ஆ.11. மாதிரி வரைபடம் அ.சா.ஆ.12. 19.00 மணிக்கு சம்பவ இடத்தில் கிடந்த டி.என்.21 எ.எனட 2171 பல்சர் கருப்புப நிற மோட்டார் சைக்கிள் டி.என்.20 எ க்யு. 5765 என்ற அப்பாச்சி கருப்பு நிற மோட்டார் சைக்கிள் அதே சாட்சிகள் முன்னிலையில் மகசரில் கைப்பற்றினேன். கைப்பற்றிய சொத்துக்களை படிவம் 95 தயார் செய்து நீதிமன்றம் அனுப்பி வைத்தேன். கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.13. படிவம் 95 அ.சா.ஆ.14. சாட்சிகள் வள்ளி, சிவகுமார், ராஜமாணிக்கம் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 3.6.2012ம தேதி வழக்கில் காயம்பட்ட கணேசன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 4.6.2012ம் தேதி இவ்வழக்கின் எதிரிகள் பாஸ்கர், ஜானகிராமன் ஆகியோர் நீதித்துறை நடுவர், திருப்பெரும்புதூர்

நீதிமன்றத்தில் சரணடைந்து வேலூர் மத்திய சிறையில் அடைக்கப்பட்டனர். 4.6.2012ம் தேதி 18.00 மணிக்கு இவ்வழக்கின் எதிரிகள் பாஸ்கர் ஜானகிராமன் ஆகிய இவர்களை போலீஸ் காவலலில் எடுத்து நிலையம் கொண்டுவரப்பட்டனர். 5.6.2012 ம் தேதி சாட்சிகள் நளினி, சத்தியராஜ் ஆகியோர் முன்னிலையில் எ.1 எதிரி பாஸ்கர் என்பவரிடமிருந்து காலை 6.00 மணி முதல் 7.30 மணி வரை ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்தேன். எ.2 எதிரி ஜானகிராமன் என்பவரிட்ம 7.30 முதல் 9.30 மணி வரை ஒப்புதல் வாக்குமூலம் அதே சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்தேன். எ.1 இடம் பெறப்பட்ட ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.15. எ.2 ஜானகிராமன் என்பவரிடம் பெறப்பட்ட ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.16. காலை 9.30 மணிக்கு எதிரிகள் அடையாளம் காட்ட அதே சாட்சிகள் முன்னிலையில் 44 செ.மீ. மொ்தத நீளமுடைய கத்தி 16 செ.மீ. மரப்பிடி 4 செ.மீ பூண் இரும்பு பிடியுடைய கத்தியை கைப்பற்றினேன். ( ஒரு கத்தி அ.சா.2 மூலமாக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது) எ.2 எதிரியிடமிருந்து அவர் அடையாளம் காட்டிய மொத்த நீளம் 44 செ.மீ. கொண்ட கத்தியை மரப்பிடி 15 செ.மீ. பூண் 3 செ.மீ. இரும்பு பகுதி 26 செ.மீ. கொண்ட கத்தியை அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றினேன். கைப்பற்றிற சொத்துக்கள் மற்றும் எதிரிகளுடன் நிலையம் வந்து படிவம் 95 மகசர் ஆகியவற்றை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.17. படிவம் 95 அ.சா.,ஆ.18. எதிரிகள் இருவரையும் போலீஸ் காவல் முடித்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினேன். இவவழக்கில் சாட்சிகள் நளினி மற்றும் சத்தியராஜை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சிவக்குமார்

ராஜமாணிக்கம மற்றும் சத்தியராஜ் ஆகியோரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அவர்கள் பார்ாவை மகசர் நான் தயார் செய்தபோது என்னுடன் இருந்தததாகவும் அதில் கையொப்பமிட்டதாகவும் கூறியுள்ளார்கள. சாட்சி சத்தியராஜ் நான் ஒப்புதல் வாக்குமூலம் வாங்கும்போது பொருட்களை கைப்பற்றும் போதும் சாட்சியாக இருந்து கையொப்பம் போட்டார். அதன் பிறகு காவல் நிலைய பொறுப்பு அதிகாரியிடம் வழக்கு கோப்புகளை ஒப்படைத்துவிட்டு எனது பணிக்கு திரும்பினேன்.

குறுக்கு விசாரணை

காவல் உதவி ஆய்வாளர் ஜெயக்குமார் எவ்வாறு வாக்குமூலம் பெற்றார் அதை எவ்வாறு பதிவு செய்தார் என்ற விவரம் எனக்கு நேரிடையாக தெரியாது என்றால் சரி. நாங்கள் தாக்கல் செய்த முதல் தகவல் அறிக்கையோடு செங்கல்பட்டு மருந்ததுவமனையிலிருந்து வந்ததாக சொல்லப்படும் தகவலை இணைத்து அனுப்பி இருக்கிறோமா என்றால் இணைக்கவில்லை. அந்த தகவலை இணைத்தால் இவ்வழக்கில் உண்மை தெரிந்துவிடும் என்பதால் தான் இணைக்கவில்லை என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கை காலம் 7 ல் எதிரி பாஸ்கர் மற்றும் அவருடைய வந்த நபர்கள் என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி. எங்கள் விசாரணை படி அ.சா.1 வள்ளி என்பவர் காயம் பட்ட நபரை ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாக என்றால் சரி. எங்களால் பதிவு செய்யப்பட்டதாக சொல்லப்படும் அ.சா.1 வள்ளியின் வாக்குமூலத்தில் பாஸ்கருடன் வந்த நபரை வெட்டியதாக தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி. விபத்து பதிவேட்டு நகல் அ.சா.ஆ.9 ல் தெரியாத நபர்கள் மற்றும்

தெரியாத ஆயுதத்தால் தாக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சம்பவம் நடைபெற்றதாக கூறப்படும் செல்லியம்மன் கோயில் முன்பாக உள்ள இடமா னது செங்கல்பட்டிலிருந்து காஞ்சிபுரம் வரக்கூடிய நெடுஞ்சாலையில் அமைந்து ள்ளது என்று சொன்னால் சரி. எங்கள் வழக்கு படி சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரம் காலை 8.00 மணி ன்றைல் சரி. பார்வை மகசர் தயார் செய்ததாக சொல்லப்படும் நேரம் மாலை 6.15 மணி என்றால் சரி. எங்களால் தயார் செய்யப்பட்டதாக சொல்லப்படும் கைப்பற்றுதல் மகசர் மாலை 7 மணி அளவில் தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். இந்த வழக்கில் சம்மந்தப்பட்டதாக சொல்லப்படும் வாகனங்களை மோட்டார் வாகன ஆய்வுக்கு உட்படுத்தினோமா என்றால் உட்படுத்தவில்லை. உதவி ஆய்வாளர் அ.சா.1 வள்ளியின் வாக்குமூலத்தை பெறும்போது அ.சா.ஆ.1 ஆவணத்தில் அங்கிருந்த மருத்துவரின் கையொப்பம் பெறவில்லை என்றால் சரிதான். அச்சு முதல் தகவல் அறிக்கையும் வாக்குமூலமும் நாங்கள் சொல்வது போன்று சொல்கின்ற முறையில் தயார் செய்யவில்லை என்றாலும் அது எங்கள் மேலதிகாரியின் உத்திரவின்படி பின்னிட்டு இந்நத வழக்கிற்காக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. அ.சா.ஆ.11 ஆன பார்வை மகசரில் ரத்தக்கறைகள் படிந்தது இருப்பதாக எந்தகுறிப்பும் காணப்படவில்லை என்றால் சரி. அ,.சா,2 கணேசனை இந்த வழக்கிற்காக 3,6.2012 ல் விசாரணைசெய்தோம் என்றால் சரி. அ.சா.2 மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டார் என்பதற்காக எந்த ஆவணமும் நான் தாக்கல் செய்யிவல்லை ன்றைல் நான் தாக்கல் செய்யவில்லை. எனக்கு பின்னால் வந்த ஆய்வாளர் தாக்கல் செய்தாரா என்றால் தெரியவில்லை. எங்களுடைய விசாரணையில் அ.சா.2 கணேசன்23.5.2012 ல் காலை முதல் எதிரியை தேடி

அவருடைய வீட்டிற்கு சென்றார் என்ற விவரத்தையும் அப்போது முதல் எதிரி அங்கு இல்லை என்ற விவரத்தையும் தெரிந்துகொண்டேன் என்றால் சரி . சம்பவ தினத்திற்கு 20 நாட்கள் முன்பாக காயம் பட்ட நபர் முதல் எதிரியை மிரட்டினார் என்ற விவரத்தை தெரிந்துகொண்டேனா என்றால் தெரிந்துகொண்டேன். முதல் எதிரி மீது எந்த வழக்கும் கிடையாது என்றால் அவர் மீது சரித்திர பதிவேடு படி குற்றவாளியா என்ற விவரம் தெரியுமா என்றால் எனக்கு ஞாபகமில்லை.ஹ முதல் எதிரி மீது எந்த வழக்கும் கிடையாது என்றும் அவர் மீது எந்த வித குற்றவாளி சரித்திர பதிவேடு வழக்கும் இல்லை என்ற விவரமும் தெரிந்துகொண்டே ஞாபகம் இல்லை என்று தற்போது வேண்டும் என்றே கூறுகிறேன என்றால் சரியல்ல. நான் ஒப்புதல் வாக்குமூலம் தயார் செய்ததாக சொல்லப்படும் போதுஎ எங்களுடன் இருந்தததாக கூறப்படும் அ.சா.5 நளினியும் அ.சா.7 சத்தியராஜ ூம் அரசு ஊழயர்கள் என்றால் சரி. பொதுவாக கிராம நிர்வாக அலுவலர் காவல் நிலையத்தோடு இணைந்து பணியாற்றக்கூடியவர் என்றால் சரி. பொதுவாக புலன் விசாரணை தொடங்கியபிறகு அரசு தரப்பு ஊழியார்கள் குறிப்பாக கிராம நீர்வாக ஊழியர்கள் சாட்சியாக இருக்கக்கூடாது என்ற விவரம் தெரியுமா என்றர்ல் தெரியாது. நாங்கள் சொல்வது போன்று இந்த வழக்கிற்காக எதிரிகளிமிருந்து எந்தவித வாக்குமூலமம் பெறவில்லை என்றாலும் அதன் அடிப்படையில் எந்த பொருட்களை கைப்பற்றவில்லை என்றாலும் அவ்வாறு கைப்பற்றிற இருந்தாலும் அதற்கும் இந்த வழகிகிற்கும் சம்மந்தம் இலலை என்றாலும் சரியல்ல. நாங்கள் சொல்வது போன்னு வழக்கு ஆவணங்கள் எதுவுமே சொன்ன நேரத்தில் சொன்ன முறைப்படி தயார் செய்யப்படவில்லை என்றாலும் வழக்கிற்கு பின்னிட்டு உயர் அதிகாரிகளின

ஆலோசனைப்படி தயார் செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. வழக்கில் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் வாகனங்களை மோட்டார் வாகன ஆய்விற்கு உட்படுத்தினால் உண்மை தெரிந்துவிடும் என்பதால் தான் எங்களால் வாகன ஆய்விற்கு அனுப்பவில்லை என்றால் சரியல்ல.

மற்ற அவசர அலுவல் மற்றும் வழக்கு விசாரணைக்க வழக்கு மீண்டும் விசாரணைக்காக ஒத்திவைக்கபட்டது.